No. of Printed Pages : 5

10208 2026

9289

பதிவு எண் | | | | | | | |

முதலாம் ஆண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

### பிரிவு - அ

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் 100 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

**1.** நீரின்றி, பனையோலை - இச்சொற்களைப் பிரித்தெழுதி புணர்ச்சி விதி எழுதுக.

**2.** வைததனை இன்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும் - ஊறிய
கைப்பதனைக் கட்டிஎன்று உண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

- திரிகடுகம்-48

(1) கோடிட்ட சொற்களைப் பிரித்தெழுதுக.

(2) மெய்ப்பொருள் கண்டு வாழும் மூவர் யாவர் ?

**3.** தை, ஏ - ஆகிய ஓரெழுத்து ஒருமொழிக்குரிய பொருளை எழுதுக.

**4.** (அ) வீட்டிற்கு வந்த விருந்தினரை __________ __________ என வரவேற்கிறோம்.

(ஆ) மாலா __________ __________ எனச் சிரித்தாள்.

[ திருப்புக

5. உயிரெழுத்துகளுக்கும், மெய்யெழுத்துகளுக்கும் உரிய இனவெழுத்துகளை எழுதுக.

6. ''கோடை நன்றாக விளைந்துள்ளது'' - இது எவ்வகை ஆகுபெயரைக் குறிக்கும் ?

7. 'பொற்றொடி வந்தாள்' - இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொகையை விளக்குக.

8. ஆறாம் வேற்றுமையின் உருபுகளை எழுதி அவை எவ்வெவ் பொருள்களில் வரும் என்பதைக் கூறுக.

9. ''முதல்வர் கருத்து யாதோர்'' - இத்தொடரில் இடம்பெறும் வழுவமைதியை விளக்குக.

10. (அ) ஆடுகள் பயிரை மேய்ந்தது.
(ஆ) ஒரு ஊரில் திருவிழா நடந்தது
- இத்தொடர்களில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

## பிரிவு - ஆ

குறிப்பு : **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

11. பெரியன், பாசிலை - இச்சொற்களைப் பிரித்தெழுதி புணர்ச்சி விதி தருக.

12. பின்வரும் உரைப்பத்தியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

தென்றல் அசைந்து வரும் தென் தமிழ்நாட்டில் அமைந்த திருக்குற்றாலம் மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும். குரவமும் முல்லையும் நறுமணங் கமழும். கோலமாமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும். இத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும்பொழுது சிதறும் நீர்த்திவலைகள் பாலாவிபோற் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும். வேனிற்காலத்தில் திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்று மருந்துச் செடி கொடிகளின் நலங்களைக் கவர்ந்து வருதலால், நலிந்த உடலைத் தேற்றும் நன்மருந்தாகும். சலித்த உள்ளத்தைத் திருத்தும் சஞ்சீவியாகும்.

**வினாக்கள் :**

1. இப்பத்தியின் மையக் கருத்து யாது ?
2. இப்பத்தியில் இடம்பெறும் வருணனைத் தொடர்களை எடுத்து எழுதுக.
3. பத்தியில் இடம்பெற்றுள்ள ஒலிநயத்தைக் குறிப்பிடுக.
4. 'சஞ்சீவி' என்பதன் பொருள் யாது ?

13. கட்டுரையின் வகைப்பாடுகளைக் கூறுக.

14. மரத்தின் பயன்கள் - என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுவதற்குத் தேவையான குறிப்புச் சட்டகம் ஒன்றைத் தயார் செய்க. கட்டுரையில் பயன்படுத்தப்பட வேண்டிய பழமொழிகள், மேற்கோள்கள் நான்கினை எழுதுக.

15. வழுவமைதியின் வகைகளை எழுதி இரண்டினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

16. வல்லெழுத்து மிகுமிடங்களை விளக்குக.

17. பெயர்ச்சொல் என்றால் என்ன ? அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

18. கீழ்க்காணும் உரையாடலைச் செய்தியாக்குக.

| | | |
|---|---|---|
| பூவிழி | : | மதி! நலமாக இருக்கிறாயா ? |
| மதி | : | ஓ! நலமாக இருக்கிறேனே. விடுமுறையை எப்படிக் கழித்தாய் ? எங்கேயாவது வெளியூருக்குச் சென்றாயா ? |
| பூவிழி | : | ஆமாம் மதி. என் மாமாவின் திருமணம் சென்னையில் நடைபெற்றது. நான் அங்குச் சென்றேன். |
| மதி | : | அப்படியா! சென்னையில் கண்டுகளிக்க நிறைய இடங்கள் இருக்கிறதே! நீ எங்கெல்லாம் சென்றாய் ? அதை பற்றிச் சொல். |
| பூவிழி | : | சென்னை நம் ஊர் போல் இல்லை மதி. மிகப் பெரிய அண்ணா நூற்றாண்டு நூலகம், தகவல் தொழில்நுட்பப் பூங்கா, உயிர்க்காட்சிச் சாலை, விமான நிலையம் என எல்லாம் புதுமையிலும் புதுமையாக இருந்தன. |

## பகுதி - II

### பிரிவு - அ

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் **100** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

19. விதிகளின் தொகுப்பே மொழி - வரையறு.

20. மொழிப்பாடம் ஒரு திறன்பாடம் - வரையறு.

21. அரையுயிர்கள் என்றால் என்ன ? அவை யாவை ?

22. ஆழ்ந்த படிப்பு என்றால் என்ன ?

23. தமிழ் வரிவடிவ எழுத்துகளை மாணவர்களுக்கு எவ்வாறு பயிற்றுவிக்கலாம் ?

24. தனித்தமிழ் நடை என்றால் என்ன ?

25. உரைநடையின் வகைகளைக் கூறுக.

26. க்ரியாவின் தற்காலத் தமிழகராதி பற்றிக் கூறுக.

27. கற்பித்தல் குறிப்பு என்றால் என்ன ?

28. பாடம் கற்பிப்புத் திட்டத்தின் இன்றியமையாமையை விளக்குக.

## பிரிவு - ஆ

குறிப்பு : **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு 200 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். 5x4=20

29. வட்டாரக் கிளைமொழியறிவு ஓர் ஆசிரியருக்குத் தேவை. ஏன் ?

30. தமிழ் இரட்டை வழக்கு மொழி. ஏன் ?

31. உரையாடலால் விளையும் நன்மைகள் யாவை ?

32. திருந்திய பேச்சின் நல்லியல்புகளைக் குறிப்பிடுக.

33. படித்தலை விரைவாக்கும் வழிமுறைகளை விளக்குக.

34. விதிவருமுறை, விதிவிளக்குமுறை இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளைப் பட்டியலிடுக.

35. ஒப்படைப்புகளை அளிக்கும் முறையை விவரிக்க.

36. நடிப்பு முறை கற்பித்தலில் உள்ள நிறை குறைகளை விளக்குக.

## பகுதி - III

**குறிப்பு :** ஒவ்வொரு வினாவிற்கும் **500** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **2x10=20**

**37.** (அ) எழுத்தொலிகள் பிறக்கும் முறைகள் பற்றி விளக்குக.

**அல்லது**

(ஆ) துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்களை விரிவாக விளக்குக.

**38.** (அ) விளையாட்டு முறையில் தமிழ் கற்பித்தலை விளக்குக.

**அல்லது**

(ஆ) செய்தி திரட்டும் திறன் ஓர் ஆசிரியருக்குத் தேவை. ஏன் ? விளக்குக.

- o O o -

10208
10208
10208